Election Commission of Sri Lanka
Election Secretariat, P.O. Box 02,
Sarana Mawatha, Rajagiriya.10107,
Sri Lanka.
0112868441 | 0112868442
0112868443 | 0112868426

www.elections.gov.lk



SELACINE MEDIA SOLUTIONS

## வெற்றி பெற்ற வடிவமைப்புகளின் சுருக்கம்



வடிவமைப்பு - முதல்மை (தமிழ்) – (The Little Hero)
வடிவமைப்பாளர் - அஹமட் ரமிஸ் முஸ்ஹப் அஹமட்
வடிவமைப்பாளரின் பாடசாலை - மட்/ வாலைச்சேனை அல்-நூர் மகா வித்தியாலயம்


இது ஒரு பின்தங்கிய கிராமப்புற பின்னணியைக் கொண்ட கதையாகும். சிறுவன் ஒருவனின் மூலம் வாக்களிப்பதன் முக்கியத்துவம் எனும் கருப்பொருள் அவனது தாத்தாவிற்குச் சென்றடைவதை அடிப்படையாகக் கொண்டு இக்கதை அமைந்துள்ளது.




வடிவமைப்பு - பெறுமதி (The value)
வடிவமைப்பாளர் - டப்ளியூ. எம். தனுஷ்க பண்டார வன்னிநாயக
வடிவமைப்பாளரின் பாடசாலை - புத்/ பல்லம நந்திமித்ர மத்திய மகா வித்தியாலம்
பிரிவு - பாடசாலை

சிறுவன் ஒருவன் கீழே விழுந்த ஒரு ரூபாய் நாணயத்தைத் தேடுவதும், அதை மற்றவர்கள் அலட்சியப்படுத்துவதும் சமூகத்தில் உள்ள பாகுபாட்டைக் காட்டுகிறது.

வகுப்புத் தலைவர்: இதில் "வகுப்பு" என்பது வகுப்பறையையும் சமூக வகுப்பையும் குறிக்கிறது. வகுப்புத் தலைவருக்கான தேர்தலொன்றில், இரு மாணவர்கள் சமமான வாக்குகளைப் பெறுகின்றனர். அப்போது எண்ணப்படாத வாக்குச் சீட்டொன்று கண்டெடுக்கப்படுகிறது. அந்த ஒரு வாக்கின் மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவது, ஒவ்வோர் வாக்கின் பெறுமதியையும் உணர்த்துகிறது. "ஒரு வாக்குத்தானே, அதைப் போடாவிட்டால் என்ன ஆகிவிடும்?" என்ற எண்ணத்திற்குப் பதில் சொல்லும் விதமாக இது அமைந்துள்ளது.





வடிவமைப்பு - னுநயச ஆயஉாயைஎநடட
வடிவமைப்பாளர் - கே. மனீஷ தில்ஷான்
வடிவமைப்பாளரின் பாடசாலை - இரத் / பட்டுஹேன மகா வித்தியாலயம்
பிரிவு - பாடசாலை

"டியர் மக்கியாவெலி" என்ற குறும்படம், பௌரா குறும்பட விழாவிற்காக உருவாக்கப்படுகிறது. குறும்படங்கள் மூலம் பொதுமக்களை வாக்களிக்க ஊக்குவிப்பதே இந்த விழாவின் நோக்கமாகும். வாக்களிப்பது ஒரு தெரிவு. மனித சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் தனது சொந்த நன்மைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் முடிவுகளை எடுக்கும் வாய்ப்பு உள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளில், சரியான நேரத்தில் ஒருவரின் கருத்தை வெளிப்படுத்துவது அல்லது ஒருவரின் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துவது, அந்த சமூகத்தில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது.

இந்தக் கருத்தின் அடிப்படையில், இயற்கையில் காணப்படும் மிகவும் நுண்ணிய உயிரினக் குழுவான எறும்புகளைப் பொருளாகக் கொண்டு, "டியர் மக்கியாவெல்லி" திரைப்படத்தின் கதைக்களம் தயாரிக்கப்பட்டுள்ளது. நமது வாக்குரிமையைப் பயன்படுத்தி நமது சுதந்திரத்தையும் தன்னாட்சியையும் நாம் பெற முடியும் என்பதையும், அதற்கான நமது விருப்பத்தையோ அல்லது எதிர்ப்பையோ வெளிப்படுத்தி, அதற்காகக் குரல் கொடுப்பதற்கான வழியைக் காட்டுவதே எங்கள் நோக்கம். நவீன அரசியல் அறிவியலில் ஒரு தனித்துவமான ஆளுமையான நிக்கோலோ மக்கியாவெல்லியை விளித்து, தற்போதைய ஆட்சியாளரின் அரசியல் அறிவை நாங்கள் கேள்விக்குள்ளாக்குகிறோம். ஏனெனில், நாடாளுமன்றம் என்பது பொதுச் சமூகத்திலிருந்து தனித்து இயங்கும் ஒரு குழு அல்ல, மாறாக அது சிவில் சமூகத்தின் ஒரு நுட்பமான பிரதிநிதித்துவமாகும்.

கதைச் சுருக்கம்
இப்படத்தில் கதாபாத்திரங்கள் நடிக்கின்றன. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள பின்னணிக் குரல், காட்சிகளுக்குத் தொடர்ச்சியான துணையாக அமைகிறது. ஒரு வீட்டில் வசிக்கும் கறுப்பு எறும்புக் குடும்பத்திற்கு இடையேயான உரையாடல் இங்கு காணப்படுகிறது. மனித வீட்டில் தங்கள் சொந்த சக்தியைப் பயன்படுத்த முடியாததால், குடியிருப்பாளர்களின் ஒடுக்குமுறையின் காரணமாக, வசதியின்றி வாழப் போராடும் ஒரு கறுப்பு எறும்புக் கூட்டத்தின் போராட்டம் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. திறன் இருந்தும் மாறாமல் இருப்பதன் கவலை, ஒருவரின் விருப்பு, வெறுப்பு வெளிப்படுத்தாமல் இருப்பது ஆகியவை 3.40 நிமிட நேரத்தில் இப்படத்தின் மூலம் விவரிக்கப்பட்டுள்ளன.




வடிவமைப்பு - ஒவ்வொரு வாக்கின் முக்கியத்துவம் (One Vote Matters)
வடிவமைப்பாளர் - ரீ.எம். துமிந்த ரொஷாந்த சந்தருவன்
வடிவமைப்பாளரின் பாடசாலை - மஹ/ வ/ ரீ.பி.மு ஹேரத், ரண்டாம் நிலை வித்தியாலயம்
பிரிவு - பாடசாலை

வாக்களிப்பது முக்கியமல்ல என்று கருதும் இளைஞன் ஒருவன், தேர்தல் தினத்தன்று தான் ஒரு புரட்சிகர நபர் என்பதைச் சமூகத்திற்குக் காட்ட தனது முகநூல் (குயஉநடிழழம) பக்கத்தில் பதிவைவொன்றை இடுகின்றான். பின்னர் செல்லாத வாக்கைப் அளிக்கும் நோக்கத்தில் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லும் அவனுக்கு, கடந்த கால சம்பவங்கள் சில நினைவுக்கு வருகின்றன.


ஒரு சந்தர்ப்பத்தில் வாடகை வாகனச் சங்கத் தலைவர் தெரிவு வாக்கெடுப்பு, விவசாய சங்கத் தலைவர் தெரிவு வாக்கெடுப்பு மற்றும் மாணவத் தலைவர் தெரிவு வாக்கெடுப்பிற்கு தான் பங்கேற்காத சம்பவங்கள் அவன் நினைவுக்கு வருகின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் அவன் தனது வாக்களித்திருந்தால் வேறு ஒருவருக்கு அந்தப் பதவி கிடைத்திருக்கும் என்பதை உணர்கிறான். இதனால் செல்லாத வாக்கு போடும் எண்ணத்தைக் கைவிட்டு, அவன் தனது வாக்கைச் சரியாகப் பயன்படுத்துகிறான்.



வடிவமைப்பு - எதிர்காலத்தை தீர்மானிக்கும் கை (The Hand that Writes the Future)
வடிவமைப்பாளர் - மேல்மா/ மது/ பெல்லன மகா வித்தியாலயம்
வடிவமைப்பாளரின் பாடசாலை - மேல்மா/ மது. பெல்லன மகா வித்தியாலயம்
பிரிவு - பாடசாலை

வெளி உலகத்துடன் தொடர்புகள் குறைந்த ஒரு கிராமத்தில் வாழும் ஒரு தாய் மற்றும் மகனை மையமாகக் கொண்டு இந்தக் கதை அமைந்துள்ளது. கஷ்டங்களையே வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு தாயும் மகனும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்குத் தேர்தல் என்பது ஒரு அர்த்தமற்ற விடயமாக தென்பட்டது. ஆனால் தேர்தல் தினத்தன்று வானொலியில் கேட்கும் ஓர் செய்தியுடன், வாழ்வின் உச்சக்கட்டத் துயரத்தில் இருக்கும் அந்தத் தாய், தனது உரிமையான "வாக்குரிமையை" இறுதித் தருணத்திலாவது பயன்படுத்தத் தீர்மானிக்கிறாள். இதன் மூலம் தனது பிள்ளையின் எதிர்கால வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும் அவளது நோக்கம் இதில் விவரிக்கப்படுகிறது.


தேர்தலில் தீர்மானிக்கப்படுவது வருங்காலத்திற்கான நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதே ஆகும். உங்களது வாக்கின் புள்ளடியிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. எனவே, நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைக்கும் பொறுப்பு உங்கள் கையால் எழுதப்படும் தருணமே வாக்களிப்பதாகும்.




வடிவமைப்பு - வினா (Question)
வடிவமைப்பாளர் - பொ/ திம்பு/ மாதுருஓய மகா வித்தியாலயம்
வடிவமைப்பாளரின் பாடசாலை - பொ/ திம்பு/ மாதுருஓய மகா வித்தியாலயம்
பிரிவு - பாடசாலை

ஏழ்மை நிறைந்த ஒரு வரட்சியான கிராமத்தில் வாழும் சரத் என்ற விவசாயி, தேர்தல் தினத்தன்று வானொலியில் செய்திகளைக் கேட்டு தனது பழைய சைக்கிளை எடுக்கிறான். கவலையுடன் வெளியேறிய அவன், சீரற்ற வீதியின் ஊடாக சிரமப்பட்டுச் செல்கிறான். அப்போது அவனுக்கு நண்பன் ஒருவனுடன் விவசாயிகளின் கஷ்டம் பற்றிப் பேசியது ஞாபகம் வருகிறது. அவனது மனைவி அவனுக்குத் தொலைபேசியில் அழைத்து, சீக்கிரம் வீட்டிற்கு வந்து வாக்களிக்கச் செல்லுமாறு கூறுகிறாள்.


மன உளைச்சலுடன் உள்ள அவன், ஒரு விஷப் போத்தலை எடுத்துக்கொண்டு உடைந்த பாலத்தை நோக்கிச் சென்று, இறந்தவனைப் போலப் படுத்துக் கொள்கிறான். தனது பேத்தியின் குரல் எதிரொலிப்பதைக் கேட்டவுடன் அவன் வேதனையுடன் எழுகிறான். பின்னர் வாக்குச் சீட்டை கையில் எடுத்துக்கொண்டு, புதிய நம்பிக்கையுடன் புதிய பாலத்தின் வழியே சைக்கிளை ஓட்டிச் செல்கிறான்.




வடிவமைப்பு - யதார்த்தம் (The Reality)
வடிவமைப்பாளர் - பீ.ஏ. கிமால சத்சர/ பீ. நிஷானி காஞ்சனா கோல்டன்
வடிவமைப்பாளரின் பாடசாலை - மொண/ ராஜகீய தேசிய பாடசாலை
பிரிவு - பாடசாலை

முறையான கல்வியின் மூலம் புத்திஜீவிகளாக உருவானவர்கள் வெற்றி பெறும்போது, மறுபுறம் எவ்விதப் பொறுப்பும் இல்லாத ஒரு குழுவினர் அரசியல் அதிகார மோகத்தின் பின்னால் அலைகிறார்கள். மக்களை ஏமாற்றி அதன் மூலம் தலைவர்களாக மாறும் கொடூரமானவர்களுக்கு எதிரான சமூக யதார்த்தத்தை இந்தக் குறும்படம் பிரதிபலிக்கிறது.

"ஒரு வலிமையான யானை தனது பலத்தை அறியாமல் எப்படி ஒரு அங்குசத்திற்கு அடங்குகிறதோ, அதேபோலத் தனது வலிமையை அறியாத மனிதன் தவறான வழிகாட்டுதலுக்கு அடிமையாகிறான்".




வடிவமைப்பு - தி பிக்சல் (The Pixel)
வடிவமைப்பாளர் - பிட்டபம்பலகே, சித பிபாஷன சுமனசிறி/ வஹும்புரகே விதூஷ தெனுவன்
வடிவமைப்பாளரின் பாடசாலை - இர/ எம்பி/ கொழும்பகெஆர தேசிய பாடசாலை.
பிரிவு - பாடசாலை

மாதுரு ஓயா விவசாயிகள் எதிர்கொள்ளும் நீர் மற்றும் கடன் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

உலகமயமாக்கலுடன், இலங்கையில் பலர் கல்விக்கு அப்பால் பணம் மற்றும் நுகர்வுப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். இதனால் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதை விட, குறுகிய கால லாபத்திற்காக ஓடும் ஒரு வாழ்க்கை முறை பரவியுள்ளது. கல்வியின் விழுமியங்கள் குறைந்துள்ளதால், பலர் அரசியல் ரீதியாக ஊழலுக்கு எளிதில் பலியாகின்றனர். ஊழல்வாதிகளான ஆட்சியாளர்கள் வழங்கும் சலுகைகளைப் பெறுபவர்கள் அவர்களைத் தலைவர்களாக கருதுகின்றனர். ஆனால் முற்போக்கு எண்ணம் கொண்ட உண்மையான பிரசைகளே சமூகத்தை நல்வழிப்படுத்துகிறார்கள். நாட்டின் எதிர்காலம் உண்மையான பிரசைகளின் கைகளிலேயே உள்ளது.




வடிவமைப்பு - "வாக்களி" Vote
வடிவமைப்பாளர் - எஸ். எம். ருஷ்டி
பிரிவு - AI

"வாக்களியுங்கள்!"
கருப்பொருள்: ஜனநாயகக் கடமை, விழிப்புணர்வு மற்றும் அலட்சியத்தின் விளைவுகள்.
வாசகம்: "வாக்களியுங்கள்! அதுவே உங்கள் குரல்".

கதைச் சுருக்கம்: அது ஒரு தேர்தல் நாள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்கச் செல்லாமல் மிகவும் சோம்பேறியாக வீட்டிலேயே இருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது தற்செயலாக வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்த ஒரு குறும்படம் ஒளிபரப்பப்படுகிறது.

அக்கதையில்: ஒரு காட்டில் பெரும்பான்மையாக இருந்த ஆடுகள் வாக்களிப்பதைத் தவிர்த்ததால், சிறுபான்மையினராக இருந்த நரிக் கூட்டம் மாத்திரம் வாக்களித்து ஆட்சியைக் கைப்பற்றுகிறது. நரியின் ஆட்சியின் கீழ் ஆடுகள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளுக்கும், துன்பங்களுக்கும், எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென இதில் காட்டப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட கதையை அவதானிக்கும் போது குடும்ப உறுப்பினர்கள், "நாங்கள் வாக்களிக்கவில்லை என்றால், அந்த ஆடுகளுக்கு ஏற்பட்ட விளைவு தான் தங்களுக்கும் ஏற்படும்" என்பதை உணர்ந்து தவறைத் புரிந்துக்கொண்டு வாக்களிக்கத் தயாகி சென்றார்கள்.




வடிவமைப்பு - வாக்கின் வலிமை Power of Vote (Ai Short Video)
வடிவமைப்பாளர் - எச். கே. லனிந்து கேஷர
வடிவமைப்பாளரின் பாடசாலை - பண் / ஹாலிஎல டென்சில் கொப்பேகடுவ வித்தியாலயம்
பிரிவு - AI

இந்தக் குறும்படம் வாக்குரிமையைப் பயன்படுத்துவது தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாச்சார ரீதியான முன்னேற்றத்திற்காக ஒரு நல்ல தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியத்தையும், வாக்களிப்பது நமது உரிமை என்பதையும் இது வலியுறுத்துகிறது. ஒரு பாடசாலையின் ஊடாக வாக்குரிமை பற்றி கலந்துரையாடுவதும், மக்களின் துயரத்தைப் போக்க நல்ல தலைவரைத் தேர்ந்தெடுப்பதும், வாக்குகளின் பெறுமதி பற்றித் தனிநபர்கள் கலந்துரையாடுவதும் இதில் இடம்பெற்றுள்ளன.

இறுதியாக, மக்களின் வாக்குரிமையின் பலனாக ஒரு நல்ல தலைவரால் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு நாட்டில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

Election Commission




"STORIES OF POWER OF VOTE"

SHORT FILM 2025
COMPETITION & FESTIVAL

# வாக்கின் பலம்

தொடர்பான கதைகள்

## குறுந்திரைப்பட விழா

2026 மே 09
தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தரங்கனீ திரையரங்கில்

Organized by Election Commission

# தேர்தல் ஆணைக்குழுவின் செய்தி



**திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க**
**தவிசாளர்**



**திரு. எம்.ஏ.பீ.சீ. பெரேரா**
**உறுப்பினர்**



**சட்டத்தரணி திரு. அமீர் பாயீஸ்**
**உறுப்பினர்**



**சட்டத்தரணி செல்வி. அனுசுயா சண்முகநாதன்**
**உறுப்பினர்**



**பேராசிரியர் திரு. லக்ஷ்மன் திசாநாயக்க**
**உறுப்பினர்**

பௌர-2025 குறும்திரைப்படப் போட்டி மற்றும் விழாவினை இரண்டாவது முறையாகவும் வெற்றிகரமாக நடாத்த முடிந்தது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் நான்காண்டு மூலோபாயத் திட்டத்தின் ஒரு தனித்துவமான செயற்பாடாக முதல் நிகழ்ச்சியை வெற்றியையும் தரத்தையும் பேணி இந்தப் பணியைத் இவ்வாறு முன்னெடுத்துச் செல்ல முடிந்திருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும்.

தனிநபர் ஒருவரின் வாக்கு ஏற்படுத்தக்கூடிய மாற்றம் எத்தகையது என்பதையும் புள்ளடியின் பலம் குறித்த கதையை ஒட்டுமொத்த வாக்காளர் சமூகத்திற்கும் எளிமையான மற்றும் கவர்ச்சிகரமான முறையில் எடுத்துரைப்பதும் காலத்தின் தேவை என்பது எமது நம்பிக்கையாகும்.

இக்காலக்கட்டத்தின் கட்டாயத் தேவையை நிறைவேற்றுவதற்காக பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைத்துறையைச் சார்ந்த நிபுணர்கள் மற்றும் இளம் திரைப்பட கலைஞர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்புகளின் மூலம், குறித்த செய்தியைப் பொதுமக்களிடையே கொண்டு சேர்க்கும் திரைப்படங்களின் தொகுப்பை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இப் பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எம்முடன் இணைந்து பணியாற்றிய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், களனிப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலைப் வளாகம் மற்றும் இரத்மலானை தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக் கல்லூரி உள்ளிட்ட ஆதரவு வழங்கிய அனைவருக்கும் தேர்தல் ஆணைக்குழு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் செய்தி



இலங்கையை “சர்வசன வாக்குரிமையைப் பாதுகாக்கும் ஒரு நாடாக” உறுதிப்படுத்தும் பயணத்தில், தேர்தல் ஆணைக்குழுவானது பின்பற்றிவரும் நான்காண்டு மூலோபாயத் திட்டத்தின் “அறிவூட்டல் மற்றும் வலுவூட்டல்” என்பது பிரதான அவதானத்திற்குரிய துறைகளில் முதன்மையானதொன்றாகும். இதன் அடிப்படையில், இரண்டாவது முறையாக நடத்தப்படும். பௌர-2025 புள்ளடியின் பலம் குறித்த குறும்திரைப்படப் போட்டி மற்றும் விழாவிற்காக தயாரிக்கப்படும் நினைவு வெளியீட்டிற்கான செய்தியொன்றை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதன் பிரசைகள் வாக்குரிமை, ஜனநாயகம் இறையாண்மை மற்றும் சுதந்திரம் போன்ற கருத்துகளை சரியாகப் புரிந்து கொண்டிருத்தல் இன்றியமையாததுடன் அது வாக்குரிமையை சரியான முறையில் பயன்படுத்துவதற்கும் உறுதுணையாக அமையும்.

தேர்தல் ஆணைக்குழு பல்வேறு வழிமுறைகளின் ஊடாக இவ்விடயங்களை சரியான முறையில் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதுடன் குறும்திரைப்படங்கள் ஊடாக இந்த செய்திகளை பரப்புவதும் இதன் ஒரு வழிமுறையாகும். இன்றைய காலத்தில் மக்களில் பெரும்பாலானோர், குறிப்பாக இளைஞர்கள், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வலுவான ஊடகமாக குறுந்தகவல் வீடியோக்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, வாக்குரிமை குறித்த ஆக்கபூர்வமான போட்டியில் வெற்றி பெறும் குறும்படங்கள் ஊடாக நாளைய சமூகத்தின் அரசியல் சிந்தனையை விரிவுபடுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும். எனவே, இந்த பணிக்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும், இதற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரசிக்க பீரிஸ் - தேர்தல் ஆணையாளர் நாயகம்

## அறிமுகம்

தேர்தல் ஆணைக்குழுவினால் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பௌர குறும்பட விழாவின் இரண்டாம் கட்டத் திரையிடல் 2026.05.09 ஆம் திகதி கொழும்பு தரங்கணித் திரையரங்கில் நடைபெறுகின்றமையானது புள்ளடியின் பலம் குறித்து பிரசைகளைத் தெளிவுபடுத்தி, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான சூழலை உருவாக்குவதற்கான மற்றுமொரு மைல்கல்லாகும்.

இம்முறை இக்குறும்பட விழாவிற்காக ”ஞவழசநைள ழக ‚ழறநச ழக ஏழவந” (வாக்கின் வலிமை பற்றிய கதைகள்) எனும் கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன். இவ்விடயம் தொடர்பாக ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் பௌர நிகழ்ச்சித் திட்டம் பற்றிய 25 விழிப்புணர்வுப் பட்டறைகள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டன. அத்துடன் ஊடகங்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் சமூக ஊடக வலைத்தளங்கள் மூலமும் பரந்தளவிலான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, பாடசாலை மற்றும் திறந்த பிரிவுகளுக்கும் மேலதிகமாக, செயற்கை நுண்ணறிவு (யுஐ) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட குறும்படங்களுக்கும் இப்போட்டியில் முதன்முறையாக வாய்ப்பளிக்கப்பட்டது.

அதற்கிணங்க, மூன்று பிரிவுகளிலும் அதிக பங்களிப்பு கிடைக்கப்பெற்ற போதிலும், நாட்டில் நிலவிய தித்வா பேரிடர் காரணமாக இத்திரைப்பட விழாவைச் சில காலம் ஒத்திவைக்க வேண்டியிருந்தது. அந்தச் சூழ்நிலையிலும், கலாச்சாரப் பணிப்பாளர் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவால் கூட்டாக நியமிக்கப்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த நடுவர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட திரைப்படங்கள் மதிப்பிடப்பட்டன. இத்தகைய படைப்பாக்கங்கள் மூலம் இலங்கைச் சமூகத்தில் சினிமா மீதான ஆர்வத்தைத் தூண்டி, அதன் ஊடாக ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் ஒரு தேசத்திற்காக "பௌர" புதிய பரிமாணத்தின் தொனிப்பொருளை மக்கள் மயப்படுத்துவதே தேர்தல் ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும்.

இதற்காக கலைப்பங்களிப்பையும் வழங்கிய களனிப் பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம், ரத்மலானை பல்கலைக்கழகம் மற்றும் திரைப்படக் கல்லூரி ஆகிய நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகளுக்கும் வளவாளர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்குறும்பட விழாவுக்காக மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் பட்டறைகளை ஒருங்கிணைத்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், வளவாளர்களாகப் பங்களித்த தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கும், அப்பட்டறைகளை ஏற்பாடு செய்த அனைத்து மாவட்ட பிரதி/உதவித் தேர்தல் ஆணையாளர்கள் உள்ளிட்ட குழாமினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்குறுந்திரைப்பட போட்டி மற்றும் விழாவினை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தொடர்ச்சியான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், செயலாளர், அனைத்து மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் பிரதான நிதி அலுவலர் மற்றும் இப்பணிக்காக ஆதரவு வழங்கிய தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் எமது வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகும்.

ஏற்பாட்டுக் குழு

## பௌர குறுந்திரைப்பட விழா தொடர்பாக மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்கள் மற்றும் புகைப்படங்கள்.

### கொழும்பு



### கம்பஹா



### களுத்துறை



### கண்டி



### மாத்தளை



### நுவரெலியா



### காலி



### மாத்தறை



### ஹம்பாந்தோட்டை



### யாழ்ப்பாணம்



### கிளிநொச்சி



### மன்னார்



### வவுனியா



### முல்லைத்தீவு



### மட்டக்களப்பு



### அம்பாறை



### திருக்கோணமலை



### குருணாகல்



### புத்தளம்



### அனுராதபுரம்



### பொலன்னறுவை



### பதுளை



### மொனராகல



### இரத்தினபுரி



### கேகாலை



## இறுதி நடுவர் குழு

### கலாநிதி அஜந்த அதுகோரல



கணினி அறிவியலில் தொடர்பாக கௌரவ பட்டத்தை பெற்றுள்ள இவர் 2022 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் Neural Pattern Recognition தொடர்பான கலாநிதி பட்டத்தை பெற்றார். தற்போது அவர் கொழும்புப் பல்கலைக்கழக (UCSC) கணினிப் பாடசாலையின் பணிப்பாளராக பணியாற்றுகிறார்.

கலாநிதி அதுகோரளவின் ஆய்வு நிபுணத்துவம் செயற்கை நுண்ணறிவு சார்ந்ததாகும். குறிப்பாக கணினிகள், வலையமைப்புகள் மற்றும் கணினி வலையமைப்பு வடிவ அறிதல் ஆகியவற்றில் அவர் கவனம் செலுத்துவதுடன் அவர் இயந்திரக் கற்றல், தரவுப் பகுப்பாய்வு, கணினி வலைப்பின்னல்கள் மற்றும் உருவகப்படுத்தல் ஆகியவற்றில் தேர்ச்சிப்பெற்ற கல்விமானாக திகழ்கிறார்.


### சதுர ஜயதிலக



தொலைக்காட்சி நாடகங்கள், ஆவணப்படங்கள், கல்வி சார் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் பணிப்பாளராகவும் தயாரிப்பாளராகவும் விளங்குகிறார். 6000-க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பணியாற்றியுள்ள இவர், பல தசாப்தங்களாகப் பல்வேறு தொலைக்காட்சித் தயாரிப்பு நிறுவனங்களில் பொது மேலாளராகவும் படைப்பாக்க இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் திரைப்பட மற்றும் இலக்கிய விமர்சகர் மற்றும் எழுத்தாளர் ஆவார்.

அவர் USAID மற்றும் Australian Aid போன்ற அமைப்புகளின் சர்வதேச உள்நாட்டு திட்டங்களின் மற்றும் பிற புகழ்பெற்ற சர்வதேச அமைப்புகளுக்கும் ஊடக ஆலோசகராகப் பணியாற்றுகிறார். சனாதிபதி திரைப்பட விருதுகள், UNDA தொலைக்காட்சி விருதுகள், OCIC திரைப்பட விருதுகள் உள்ளிட்ட நாட்டின் முன்னணி திரைப்படம், தொலைக்காட்சி, விருதுகள் மற்றும் இலக்கிய விழாக்களில் அவர் நடுவர் குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். தற்போது அரச திரைப்பட ஆலோசணைக் குழு மற்றும் பொதுத் திரைப்பட கட்டுப்பாட்டு சபையின் உறுப்பினராக உள்ளார்.

### விமலநாத் வீரரத்ன



ராவய, இருதின மற்றும் சத்ஹண்ட ஆகிய பத்திரிகைகளின் முன்னாள் தலைமை ஆசிரியராவார். இவர் லங்கா நியூஸ் வெப், நெக்ஸ்ட் டிவி ஆகியவற்றின் செய்தி மேலாளராகப் பணியாற்றியுள்ளா இவர் லீடர் டிவி மற்றும் சிலுமின பத்திரிகையில் அரசியல் ஆய்வாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

இலக்கிய திரைப்பட மற்றும் நாடக விமர்சகரான இவர் விருது பெற்ற எழுத்தாளராவார். அரச இலக்கிய விழாக்கள் மற்றும் திரைப்பட விருது விழாக்களில் நடுவர் குழு உறுப்பினராகவும் தேர்வுக் குழு உறுப்பினராகவும் தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்கி வருகின்றார்.

### மனுபன்து வித்யாபதி



சிரேஷ்ட பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளரான இவர் திரைப்பட விமர்சகராகவும் பணியாற்றி வருகின்றார்.

மேலும் திரைப்பட துணைக்குழுவின் உறுப்பினராகவும் இருப்பதுடன் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடக விருதுகளின் நடுவர் குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார்.

### குணசிறி சில்வா



சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் நூலாசிரியரான இவர் திரைப்பட விமர்சகராகவும் பணியாற்றி வருகின்றார்.

மேலும் பொதுத்திரைப்பட கட்டுப்பாட்டு சபை மற்றும் ஆலோசனை குழு உறுப்பினராகவும், திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நாடக விருது விழா குழுவின் பூர்வாங்க தேர்வுக் குழு உறுப்பினராகவும் செயற்படுகின்றார்.

### பாத்திமா ஷானாஸ்



பாத்திமா ஷானாஸ், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தொடர்பியல் மற்றும் படைப்புக் கலைகள் பிரிவில் தொடர்பாடல் மற்றும் ஊடக கற்கைகள் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

விருது பெற்ற ஒரு குறும்பட இயக்குநரான இவரது படைப்புகள் சமூக நீதி, பாலின நிலை மற்றும் கலாச்சார அடையாளங்கள் குறித்து ஆராய்கின்றார்.

திரைப்படத் தயாரிப்பிற்கு மேலதிகமா இவர் ஒரு தீவிர ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் உள்ளதுடன் இவர் பல தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். மேலும், இலங்கைத் திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் வானொலி விருதுகளில் நடுவர் குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார்.

### சன்ன பீ. த சில்வா



பௌர முதல் குறும்பட விழாவின் ஏற்பாட்டுக் குழு மற்றும் நடுவர் குழுவில் உறுப்பினராக உள்ளார். மேலும் அவர் ஓர் எழுத்தாளர், சஞ்சிகை மற்றும் நூல் ஆசிரியராக விளங்கும் இவர் தேர்தல் ஆணைக்குழுவின் ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.